## மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை – 02

**கத்தோலிக்க திருமறை** | **க.பொ.த. சாதாரணதரம் 2024 (2023)**

### பகுதி I

**மிகப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

01) திருவிவிலியத்தின் பிரதான மற்றும் துணை ஆசிரியர்கள்.
(1) இறைவன், மனிதன் (2) மனிதன், இறைவன்
(3) இறைவன், ஆவியானவர் (4) மனிதன், ஆவியானவர்

02) புதிய ஏற்பாட்டில் முதன் முதலாக எழுதப்பட்ட நூல்.
(1) யோவான் நற்செய்தி (2) லூக்கா நற்செய்தி
(3) மத்தேயு நற்செய்தி (4) மாற்கு நற்செய்தி

03) "நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும். இவ்வார்த்தையே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி". இப்பகுதி அடங்கியுள்ளது.
(1) 1 பேதுரு 1:25 (2) 2 பேதுரு 1:25 (3) 1 பேதுரு 3:25 (4) 2 பேதுரு 2:25

04) "ஆண்டவரின் நண்பன்" எனும் சொற்பதம் குறித்து நிற்பது,
(1) உயர்ந்தவர் (2) தெயோப்பில் (3) தாழ்ந்தோர் (4) மக்கள்

05) சிலுவை எமது ............. அடையாளமாகும். இடைவெளிக்குப் பொருத்தமானது.
(1) நம்பிக்கை (2) இறப்பின் (3) மீட்பின் (4) வாழ்வின்

06) ஆண்டவர் சாலமோனுக்குக் கனவில் தோன்றிய மலை.
(1) ஏபால் மலை (2) கல்வாரி (3) கிபயோன் (4) தபோர்மலை

07) இயேசு ஏரோது அந்திப்பாசின் ஆட்சிக்குபட்பட்ட ....... பகுதியைச் சேர்ந்தவர். கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமானது.
(1) நயீன் (2) கலிலேயா (3) சமாரியா (4) ஜெருசலேம்

08) இயேசு விண்ணேற்றம் அடைய முன்னர் தமது சீடர்கள், திருத்தூதர்கள் மீதும் அனுப்புவதாக வாக்களித்தார்.
(1) வானதூதர்களை (2) செராபீம்களை (3) தூதுவர்களை (4) தூய ஆவியை

09) "இரவு முழுவதும் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை". என இயேசுவிடம் கூறியவர்.
(1) யோவான் (2) மாற்கு (3) பேதுரு (4) லூக்கா

10) திருச்சபையின் பண்புகளில் "ஏகம்" என்பது,
(1) நம்பிக்கை (2) உறுதிப்பாடு (3) ஒருமைத்துவம் (4) விடாமுயற்சி

11) திருப்பலியில் தம்மையே தந்தைக்கு பலியாக ஒப்புக்கொடுத்து ....... வழியாக தம்மையே எமக்கு உணவாகத் தருகின்றார். இடைவெளிக்குப் பொருத்தமானது.
(1) நன்றி (2) பானம் (3) நற்கருணை (4) வழிபாடு



kalvi.lk

12) "என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" இதனைக் குறிக்கும் திருவிவிலியப் பகுதி.

(1) வி.ப 20:3-6 (2) தொ.நூ 10:3-6 (3) லேவியர் 9:3-6 (4) தி.பா 10:3-6

13) a- ஒழுக்கக் கல்வி

b. சக நண்பர்களை மதியாமை

c. செபிக்கக் கற்றுக்கொடுத்தல்

d. சக நண்பர்களுடன் முரண்படுதல்

மேற்படி கூற்றுக்களுள் பிள்ளைகளின் கல்வி தொடர்பான பொறுப்பு பெற்றோருக்கு உரியது என்பதனை எடுத்துக்காட்டுவது,

(1) ab (2) bc (3) ac (4) abc

14) "இயேசு அவரிடம் உனது வாளை அதன் உறையில் திரும்பப் போடு. ஏனெனில் வாளை எடுப்போர் அனைவரும் வாளால் சரிந்து போவார். மேற்படி விடயம் கூறப்பட்டது.

(1) யோவானுக்கு (2) யூதாவுக்கு (3) யாக்கோபுக்கு (4) பேதுருவுக்கு

15) உடைமைகளை விற்று தர்மம் செய்யுங்கள் இற்றுப்போகாத பணப்பைகளையும் விண்ணுலகில் குறையாத செல்வத்தை தேடிக் கொள்வீர்கள்" பொருத்தமான இறைவார்த்தைப் பகுதி.

(1) லூக்கா 12:33 (2) யோவான் 13:40

(3) மத்தேயு 10:20 (4) மாற்கு 9:4

16) "பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே....."

(1) வி.ப 20:16 (2) வி.ப 10:10 (3) வி.ப 1:5 (4) வி.ப 4:3

17) திருவழிபாடு பற்றிய விடயத்தினை 12ம் பத்திநாதர் எச்சுற்றுமடலில் முன்வைக்கின்றார்.

(1) இறைவனுக்குப் புகழ் (2) இறைவனின் நடுநிலையாளர்

(3) இறைவனை நாடுதல் (4) தொழிலாளர் நிலைமை

18) இயேசு கெத்சமனி தோட்டத்திற்கு கூட்டிச்சென்ற சீடர்கள்.

(1) பேதுரு, யாக்கோபு, யோவான் (2) பேதுரு, யூதா, தோமா

(3) யாக்கோபு, மத்தேயு, ததேயு (4) யோவான், யாக்கோபு, தோமா

19) விடுதலைப்பயண அனுபவத்திலிருந்து உருவானதே ............ ஆகும். இடைவெளிக்குப் பொருத்தமானது.

(1) திருமுகம் (2) ஐந்நூல் (3) லேவியர் (4) இணைச்சட்டம்

20) கத்தோலிக்கத் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் மேலதிகமாக ஏற்றுக்கொண்ட நூல்களின் எண்ணிக்கை.

(1) 6 (2) 7 (3) 4 (4) 5

21) "மானிடா நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு" இக் கூற்றோடு தொடர்புடையவர்.

(1) எசாயா (2) எரேமியா (3) குல்தா (4) எசேக்கியேல்

22) தூய பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டவர்.

(1) தூய யோவான் (2) தூய லூக்கா

(3) தூய மாற்கு (4) தூய மத்தேயு



kalvi.lk

23) படைப்புப் பற்றிய முதற் கதையின் ஆக்கம்.
(1) யாவே மரபு (2) குரு மரபு (3) ஏலோகீம் மரபு (4) இணைச்சட்ட மரபு

24) ஆதிப்பெற்றோர் காலம் தொடக்கம் இவ்வுலகில் பாவம் வளர்ந்தது ........ காலம் நெருங்கும் போது அது உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இடைவெளிக்குப் பொருத்தமானது.
(1) ஆபிரகாமின் (2) யாக்கோபின் (3) நோவாவின் (4) லோத்தின்

25) பார்வோன் மன்னன் இஸ்ரயேலர் வெளியேற அனுமதித்த வாதை.
(1) காரிருள் உண்டாதல் (2) கால்நடை சாவு
(3) தண்ணீர் இரத்தமாதல் (4) தலைமகன் சாவு

26) தாய்த் திருச்சபை திருவழிபாட்டு ஆண்டின் பிரதான இரு காலங்களை மனமாற்றத்தின் காலங்களாகத் தந்துள்ளது. அவற்றைக் குறிப்பது.
(1) திருவருகைக்காலம், பொதுக்காலம் (2) தவக்காலம், பாஸ்காகாலம்
(3) திருவருகைக்காலம், தவக்காலம் (4) தவக்காலம், உயிர்ப்புக்காலம்

27) "இயற்கைக்கு மாறாக இடம்பெறும் நிகழ்வு புதுமை" ஆகும். எனக் கூறியவர்.
(1) தூய அம்புறோஸ் (2) தூய 2ம் அருள் சின்னப்பர்
(3) தூய 23ம் அருளப்பர் (4) தூய அகுஸ்தினார்

28) ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் ........... அவர்களுக்கு உரியது. இடைவெளிக்குப் பொருத்தமானது,
(1) கடவுளைக் காண்பர் (2) அவர்கள் நிறைவு பெறுவர்
(3) விண்ணரசு (4) ஆறுதல் பெறுவர்

29) உள்ளார்ந்த மனம் வருந்துதலில் உள்ளடங்காதவை.
(1) செயல்வழிப் பாவங்களுக்கான மனத்துயரத்தையும், வெறுத்து ஒதுக்குதல்.
(2) எதிர்காலத்தில் மீண்டும் பாவம் செய்யாமலிருக்கும் உறுதிப்பாடு
(3) மீண்டும், மீண்டும் பாவம் செய்யத் தூண்டுதல்
(4) கடவுளின் உதவியில் நம்பிக்கை வைப்பது.

30) குருத்துவத்தின் முழு நிறைவு ....................... ஆகும். கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமானது,
(1) திருத்தொண்டர் (2) கருதினால் (3) துறவி (4) ஆயர்

a : சுதந்திர விருப்பம் b: இரத்த உறவு
c: ஒருமை கட்டவிழாமை d: அன்னியோன்னிய அன்பால் முழுமையடைதல்

31) கத்தோலிக்க திருமணத்திலுள்ள சட்டரீதியான தடைகளைக் கொண்டவை.
(1) a,c (2) b,d (3) a,b (4) a,d

32) கத்தோலிக்க திருமணத்தின் பண்பைக் குறிப்பது,
(1) a (2) c (3) b (4) d

33) கத்தோலிக்கத் திருமணத்தின் நோக்கத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து,
(1) c (2) a (3) b (4) d

34) ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர்.
(1) வனத்து அந்தோனியார் (2) பசில்
(3) தேப்ஸ் சின்னப்பர் (4) தூய ஆசீர்வாதப்பர்


kalvi.lk

35) துறவற வாழ்வின் பண்புகள்.

(1) குழும வாழ்வு, செப வாழ்வு, பணி வாழ்வு
(2) குழும வாழ்வு, செப வாழ்வு, தனி வாழ்வு
(3) குழும வாழ்வு, குடும்ப வாழ்வு, தனி வாழ்வு
(4) செப வாழ்வு, பணி வாழ்வு, குடும்ப வாழ்வு

36) மறைப் பாடசாலை கிறிஸ்தவனுக்கு பொதுக்குருத்துவத்தின் மூலம் ........................ ஈடுபட உதவியாகின்றது. கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமானது,

(1) இறைவாக்குப் பணியில் (2) உதவி செய்யும் பணியில்
(3) வாழ்க்கையில் (4) எதிர்கால நிலமையில்

37) மனித வாழ்வை பாதுகாக்கவும், கட்டியெழுப்பவும் அவசியமானது.

(1) துன்புறுத்தல் (2) பழிக்குப் பழி (3) சமாதானம் (4) அன்பு காட்டுதல்

38) "கிறிஸ்தவ அன்பு ஓர் உணர்வுக்கோ அல்லது அனுதாபத்திற்கோ வரையறுக்கப்பட்டதல்ல மாறாக அந்த அன்பு செயலில் வெளிப்படுத்தப்பட வேண்டும்." என்பது பற்றி குறிப்பிடுபவர்.

(1) தூய யாக்கோபு (2) தூய லூக்கா (3) தூய யோவான் (4) தூய பேதுரு

39) எந்தத் தினத்தில் பங்குத் திருநாள் மற்றும் கிறிஸ்து பிறப்பு, வருடப் பிறப்பு கொண்டாடப்படும் பட்சத்தில் சுத்த போசனம் அனுசரிப்பது விதிவிலக்காகும்.

(1) ஞாயிற்றுக்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) சனிக்கிழமை (4) புதன்கிழமை

40) செபத்தின் மூலம் நாம் கேட்பது தவறாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் செய்யும் நம்பிக்கை அறிக்கை.

(1) வேண்டுதல் (2) விண்ணப்பம் (3) ஆமென் (4) மன்றாட்டு

LMD Unit Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page